மலர் 1 இதழ் 3 ஜனவரி, 2017 ISSN : 2454-3993

# சங்க இலக்கியத்தில் நாடகக்காட்சிகள் கலித்தொகையை முன்வைத்து

வி. செந்தமிழ்ச்செல்வி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
டாக்டர் என்.ஜி.பி.கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்

## முன்னுரை

மாந்தர்களின் தேவையை நிறைவு செய்வதற்கான அறிவையும் ஆற்றலையும் தரவல்லது கலையாகும். அது செயல், திறமை, பயன், அழகு, சுவை என்னும் பல்வேறு கூறுகளைக் கொண்டது. நாடகம் என்னும் கலை வடிவமே மக்களுக்கு அறிவையூட்டும் கல்விச்சாலையாக விளங்கியுள்ளது. முற்காலத்தில் இன்று போல் செய்தித்தாள்களோ ஊடகங்களோ நூல் நிலையங்களோ இல்லை. மக்களுக்கு அறிவையூட்டும் கல்விச்சாலையாகவும் கருவியாகவும் விளங்கியவை நாடக மேடைகளே ஆகும். நாடகத்திற்கு இத்தகையதோர் உயர்ந்த சமுதாயப் பணியிருந்ததால் பண்டைத் தமிழர் அதற்கு வேண்டிய அனைத்து உறுப்புகளும் நன்கு ஆராயப்பட்டு அவற்றிற்கு இலக்கணமும் வகுத்துள்ளனர்.

## நாடகம்

நாடகம் என்பது "நள்" என்னும் பகுதியாகப் பிறந்த தொழிற்பெயர் எனத் தேவநேயப்பாவாணர் கூறுகிறார். மேலும், இவர் நாடகம் எனும் சொல்லிற்கு விளக்கம் தந்து, நடி + அகம் = நாடகம் என அச்சொல்லைப் பிரித்துப் பொருளுணர்த்தி நிலைப்படுத்துகிறார். நாடகம் கதை தழுவ வரும் கூத்து எனவும், நடம், நட்டம் என்பன தனிக்கூத்தும் பாட்டிற்கேற்ற மெய்ப்பாடுமாகும் எனவும் அவர் எடுத்தியம்புகிறார். மேலும் "நட்டம் பயிற்றுபவன் நட்டுவன்" என்றும் "நாடகம் பயில்பவள் கணிகை" என்றும் நாடகமாடுபவள் "நாடகக் கணிகை" என்றும் கூறி, அவள் தாளத்தைக் கணித்து ஆடுவதால் "கணிகை" என்ற சிறப்புப் பெயரையும் பெறுகிறாள் என்பதையும் அவர் விளக்குகிறார். "நடி" என்பது "நட" என்னும் சொல்லின் திரிபு எனக் கூறி முதன்முதலாக நடித்தது ஒருவனைப்போல நடந்து

காட்டியதே என்பதையும் எடுத்துச் சொல்லி, நாடகம் என்ற அச்சொல் ஒரு நிகழ்வு மூலம் தோன்றியுள்ள வரலாற்றுச் செய்தியையும் தருகின்றார்.

**நாடகம் பற்றி அறிஞர்கள் தரும் சான்றுகள்**

நாடகக் கலையின் இயல்பையும் பயனையும் அறிஞர்கள் பலர் சுட்டிப் பாராட்டியுள்ளனர். அவை:

"குழந்தை முதல் தொண்டைமான் வரை படித்துப் பார்த்து மகிழும் தேனினும் இனிய தமிழாக நாடகத்தமிழ் உள்ளது" என்று ஆறு. அழகப்பன் கூறுகிறார்.

"நாடகம் கலைக்கரசு, நாட்டின் கண்ணாடி, பாமரர்களின் பல்கலைக்கழகம், உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அறிவையும் அன்பையும் தூய்மையையும் வெளிப்படுத்தி மக்களைப் பண்படுத்தும் மகத்தான கலை" என்று நாடகத்திற்குத் தன் நடிப்பின் வாயிலாகத் தனி இலக்கணம் வகுத்த அவ்வை சண்முகம் கூறுகிறார்.

"எல்லாக் கலைகளும் இணைந்து இயங்கும் கலையாதலின் நாடகம் வழங்கும் இன்பம் பெரிது" என்பது நாடக ஆய்வாளர் ஆ. இராமுவின் கருத்தாகும்.

**தொல்காப்பியர் தரும் சான்றுகள்**

பண்டைத் தமிழகத்தில் தமிழ் நாடகம் சிறந்த நிலையில் இருந்தது என்பதற்கும், அது தமிழரால் பெரிதும் போற்றப்பட்டது என்பதற்கும் தொல்காப்பியச் சான்றுகள் பலவற்றைக் காணலாம்.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்"( தொல். பொருள். அக.53)

என்பது தொல்காப்பிய நூற்பாவாகும்.

இந்நூற்பாவில் நாடகம் என்ற சொல்லையே தொல்காப்பியர் பயன்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. செய்யுள் வழக்கு, உலக வழக்கு என்பதற்குத் தொல்காப்பியர் நாடக வழக்கைக் கூறியிருப்பதனால் நாடகம் தமிழ் மக்களுக்கு இலக்கியம் போன்றே நன்கு அறிமுகமான ஒரு கலையாக விளங்கியுள்ளது என்பது புலப்படுகிறது. மேலும் தொல்காப்பியர் "மெய்ப்பாட்டியல்" என்ற ஒரு இயலையே பகுத்திருப்பது இங்குக் குறிப்பிடத் தகுந்தது.

**சங்க இலக்கியச் செய்திகள்**

சங்க காலம் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கியது போலவே இலக்கிய வளத்திலும் சிறந்து இருந்தது. சங்க இலக்கிங்களாகிய பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் உலகச் செவ்வியல் இலக்கியங்களுக்கு இணையாகக் கருதப்படுகின்றன. இசையும் நாடகமும், இயல்போலவே சங்ககாலத்தில் தலைமை பெற்றுத் திகழ்ந்தது என்பதற்குச் சங்கப் பாடல்கள் சான்றுகளாகின்றன.

பொருநர், பாணர், பாடினி, விறலியர், ஆடுநர், குயிலுவர், கோடியர், வயிரியர், கூத்தர் போன்ற கலைஞர்கள் வாழ்ந்ததைச் சங்க இலக்கியங்கள் பரவலாகப் பேசுகின்றன. இவையெல்லாம் இசையும் நாடகமும் செம்மையுற்று விளங்கியதற்குச் சான்றுகளாகின்றன.

**கலித்தொகையில் நாடகச் செய்திகள்**

சங்க அகப்பாடல்களில் கலித்தொகைப் பாடல்கள் நாடகப்பான்மையில் உரையாடல் அமைப்பில் அமைந்துள்ளன. கற்றறிந்தோர் ஏத்தும் கலித்தொகைப் பாடல்களைப் படிக்கும் போது, ஒரு சிறந்த சிறுகதையைப் படித்த உணர்வோ அல்லது ஓர் உயர்ந்த நாடகத்தை அனுபவித்த உணர்வோ ஏற்படுவதை அறிஞர் பலரும் சுட்டிச் சென்றுள்ளனர்.

"மனித வாழ்க்கையாகிய நாடகத்திற்கு முதலும், கருவும் ஆகிய இயற்கை ஆடரங்காக அமைந்துள்ளது. மேலும் இடமும் காலமுமாகிய முதற்பொருள், நாடகத் திரைச்சீலை எனில் திரையில் தீட்டப்பட்டுள்ள மரம், செடி, கொடி, விலங்கு முதலியவை கருப்பொருட்களாகும். சுருங்கச் சொன்னால் முதற்பொருளும் கருப்பொருளும் ஆகிய அரங்கில் உரிப்பொருளாகிய உணர்ச்சிச் செயற்பாடு நடைபெறுகிறது" என்று இலக்கியத்தை நாடக அரங்கமாகக் காட்டுவர். இந்தக் கருத்து மற்ற தொகை நூல்களின் அகப்பாடல்களைக் காட்டிலும் கலித்தொகையின் பாடல்கள் சிறப்புற விளங்குகிறது. ஏனெனில் அகப்பாடற் பண்பிற்கு ஆசிரியப்பாவைக் காட்டிலும் கலிப்பாவே ஏற்றதாயுள்ளது என்ற தொல்காப்பியர் கருத்தை ,

"கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரியதாகும் என்மனார் புலவர்" (தொல். பொருள். அகத்.53)

என்ற நூற்பாவின் மூலம் அறியலாம்.

நாடகக்கலைக்கு வேண்டிய அமைப்பு முறைகளாவன தொடக்கம், முரண், திருப்பம், உச்சகட்டம், சரிவு, முடிவு என்பன. இம்முறைகள் கலித்தொகையில் நன்கு பொருந்தியுள்ளன. சான்றாக, பாலைக்கலியின் ஏழாவது பாடலைக் குறிப்பிடலாம்.

**தொடக்கம்**

இப்பாடலின் தொடக்கமாக, சொல்லாது பிரியலுற்ற தலைவன் பற்றி அறிந்த தோழியானவள், அவனை எதிர் சென்று உரையாடுவதாக அமைகின்றது. இதில் தோழி, தலைவனை முன்னிலைப்படுத்திப் பேசுகின்றாள். இவ்வாறு நாடக அரங்கில் நேரில் காண்பது போலவே தொடக்கக் காட்சியினைப் பாடல் நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றது.

**முரண்**

தலைவியும் தலைவனும் ஒருவரையொருவர் விரும்புகின்றனர். இதனால் பாடற்போக்கு எவ்விதச் சிக்கலும் இல்லாமல் தொடர்கிறது. இந்நிலையில் தலைவன் பொருள்வயிற் பிரிகின்றான். இதை,

" நடுவிகந் தொரீ நயனில்லான் வினைவாங்கக்
கொடி தோர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு
கடுகுபு கதிர் மூட்டிக் காய்சினத் தெறுதலி
னுறலூறு கமழ்கடா அத் தொல்கிய எழில்வேழம்
வறனுழு நாஞ்சில் போன் மருப்பூன்றி நிலம்சேர
விறன்மலை வெம்பிய போக்கரு வெஞ்சுரஞ்
சொல்லா திறப்பத் துணிந்த" ( கலித். பா. கலி. 7:1-7)

என்ற பாடல் வழியாக அறியலாம். "நடுவண் நிலைமைக் கைவிட்ட அமைச்சனின் பேச்சைக்கேட்டு அரசன் கொடுங்கோலாட்சி புரிதல் போலப் பகலோன் வெய்யக் காய்கின்ற வெஞ்சுரத்தின் வழியாகத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லத் துணிகின்றான்" என்பது இதன் பொருளாகும். இங்கு அகச்செய்திக்குப் புறப்பொருள் உவமம் முரணாக வந்துள்ளது. அன்பால் துனியும் வாழ்க்கைக்கு முரணாக அரசனின் கொடுங்கோலாட்சி அமைகிறது.

**திருப்பம்**

தலைவியிடம் சொல்லாமல் பிரிந்து செல்ல நினைத்த தலைவனைத் தோழி கண்டுவிடுகிறாள். இதை,

" சொல்லா திறப்பத் துணிந்தனிர்க்கொரு பொருள்
சொல்லுவ துடையேன் கோன்மின் மற்றைஇய" ( கலி. பா.கலி. 7:7-8)

என்ற தோழி கூற்றின் மூலம் அறியலாம். இங்கு சொல்லாமல் சொல்லும் தலைவனின் பாதையில், எதிர்பாராத விதமாகத் தோழியால் "திருப்புமுனை" ஏற்படுகிறது.

**உச்சகட்டம்**

நாடக உத்திகளில் உச்சகட்டமானது ஆவலைத் தூண்டுவது. நாடகப் போக்கை உச்சநிலைக்கு இட்டுச் செல்வது, முடிவை எதிர்நோக்கி ஆர்வத்துடன் நிற்கச் செய்வது ஆகிய பணிகளைச் செய்கிறது. இது நாடகத்தின் மிகச்சுவையான விறுவிறுப்பான பகுதியாகும். தலைவன் பிரிவது உறுதியான நிலையில் தலைவியுடன் கூடிவாழும் இல்வாழ்க்கையே பொருளைவிடச் சிறந்தது என்று தோழி வாதிடுகிறாள். இச்செய்தி பொதுவாகத் தாழிசையில் மூன்றாக அடுக்கி வரும். "விரலாலே வாசிக்கப்பட்டு ஒலிக்கும் நரம்பு ஏழும் தம்முடைய பயன் இன்றாம்படி தானக்கோலில் அகப்பட்டு இடைநின்ற நரம்பு அற்றுப்போம் யாழினும் நிலைபேறில்லாத பொருளை அறிவுடையோர்கள் நச்சார்" என்றும்,

" மரீஇத்தாங் கொண்பாரைக் கொண்டக்காற் போலாது
பிரியுங்காற் பிறரெள்ளப் பீடின்றிப் புறமாறுந்
திருவினும் நிலையிலாப் பொருளையு நச்சுபவோ"(கலித். பா. கலி -7:12-14)

என்றும் தோழி குறிப்பிடுகின்றாள். இதைக்கேட்ட தலைவன் எந்த முடிவை எடுப்பானோ என்ற உச்சநிலையைப் பாடற்போக்கு காட்டுகிறது.

**சரிவு**

பாடல் முடியும் நிலையில் சரிவு தோன்றுகிறது. பாடற்போக்கில் ஏதேனும் மாற்றம் நிகழுமா? காதலன் செலவு தவிர்ப்பானா? காதல் நிலை பெறுமா? என்ற நிலையில் மீண்டும் தோழியின் வார்த்தைகள் மூலமாக ஒரு திருப்பம் ஏற்பட்டு சரிவு தோன்றுகிறது.

"நச்சல் கூடாது பெரும் விச்செல
வொழிதல் வேண்டுவல் சூழிற் பழியின்று
மன்னவன் புரந்தர வருவிருந்தோம்பித்
தன்னகர் விழையக் கெடின்
இன்னுறல் வியன்மார்ப அதுமனும் பொருளே" (கலித்.பா.கலி.7:19-23)

**முடிவு**

தோழியின் கூற்று மூலமாகத் தலைவன் செலவழுங்குதல் முடிவாக அமைகிறது. இதனால் தலைவிக்கும் தலைவனுக்கும் தோழிக்கும் மகிழ்ச்சி பிறந்தது. இவ்வாறாக கலித்தொகையின் ஒவ்வொரு பாடலும் மேடையில் நடிக்கக்கூடிய நாடகங்களைப் போன்று நாடகக்கூறுகளைக் கொண்டு அமைந்துள்ளன.

**சான்றெண்விளக்கம்**

1. தமிழ் நாடகம் தோற்றமும் வளர்ச்சியும், ப.3,
2. நாடகக்கலை, ப. 4
3. தமிழில் வரலாற்று நாடகங்கள், முனைவர் பட்ட ஆய்வேடு, ப.1
4. இருபதாம் நூற்றாண்டில் நாடகம், ப. 90